## பிடி கத்தரி விவகாரம் ஆய்வுக்குப் பின்னரே அனுமதி: மன்மோகன் சிங்

First Published : 25 Feb 2010 02:43:26 AM IST

புதுதில்லி, பிப். 24: மரபணு மாற்றப்பட்ட கத்தரி காய் விவகாரத்தில் ஆய்வுக்குப் பின்னரே அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்ற அமைச்சர் ஜெய்ராம் ரமேஷின் நிலைப்பாட்டுக்கு பிரதமர் மன்மோகன் சிங் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்பதையும் பிரதமர் மன்மோகன் வலியுறுத்தினார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரி காய் விவகாரம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங் மூத்த அமைச்சர்கள் சிலருடன் தில்லியில் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரி காயைப் பயன்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வேளாண் அமைச்சர் சரத் பவார், பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதினார். இதையடுத்து பிரதமர் தலைமையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனையில் மூத்த அமைச்சர்கள் சரத் பவார், கபில் சிபல், ஜெய்ராம் ரமேஷ், பிரித்விராஜ் சவாண் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மரபணு மாற்றப்பட்ட விளை பொருள்களுக்கு அனுமதி அளிப்பதற்கான உயிரிதொழில்நுட்ப நிபுணர் குழுதான் மரபணு மாற்றப்பட்ட கத்தரி காய் குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்று பிரதமர் கூறினார்.

உயிரிதொழில்நுட்ப ஒழுங்கு முறை ஆணையம்: தேசிய உயிரிதொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றார் அவர்.

மேலும் உயிரிதொழில்நுட்பத் துறையில் அரசு மற்றும் தனியார் முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே மரபணு மாற்றப்பட்ட கத்தரி காயை வர்த்த ரீதியில் பயிடுவதற்கு தாற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதை சுற்றுச் சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் நியாயப்படுத்தினார்.

இந்தப் பிரச்னையில் ஒருமித்த கருத்து எட்டப்படும் வரை மரபணு கத்தரி காய் விஷயத்தில் முடிவு எடுப்பதை ஒத்திபோட வேண்டும் என்று அவர் கூறினார்.

**விவசாயிகள் குழுவுக்கு கதிரடிக்கும் இயந்திரம் வழங்கல்**

First Published : 25 Feb 2010 01:01:41 AM IST

பழனி, பிப். 24: பழனியை அடுத்த புங்கமுத்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், மத்திய காலக் கடன் அடிப்படையில் விவசாயிகள் குழுவுக்கு கதிரடிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

பழனியை அடுத்த கிராமப் பகுதிகளில் 10 சிறு, குறு விவசாயிகள் கொண்ட விவசாய கூட்டு பொறுப்புக் குழு செயல்பட்டு வருகிறது. இவர்கள் தங்களுக்காகவும், பிறருக்காகவும் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது வாழை, கரும்பு, நெல், முருங்கை சாகுபடி செய்து, கடனையும் கட்டி முடித்துள்ளனர். இவர்களுக்கு 5 லட்சம் வரையில் கடன் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில் புங்கமுத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில், மத்திய காலக் கடன் அடிப்படையில் சுமார் ரூ.1.40 லட்சம் மதிப்புள்ள கதிரடிக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சங்கத்தின் தனி அலுவலர் குணசேகரன் தலைமை வகித்தார். மத்திய கூட்டுறவு வங்கியின் கள மேலாளர் அய்யாத்துரை, சரக மேற்பார்வையாளர் அர்ச்சுனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயலர் தனபாலன், பழனிச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தனி அலுவலர் குணசேகரன் கூறுகையில், இதுபோன்ற விவசாயிகள் குழுவினர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை அணுகினால் விவசாய கருவிகளான டில்லர், டிரெய்லர், கதிரடிக்கும் இயந்திரம் போன்றவை மத்திய கால கடனாக வழங்கப்படுகிறது. தொப்பம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கென தனி குழு அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் முன்னேறலாம் என தெரிவித்தார்.

**நாளை விவசாயிகள் குறை தீர்வுக் கூட்டம்**

First Published : 25 Feb 2010 01:06:49 AM IST

திருவள்ளூர், பிப். 24: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளின் குறை தீர்வு நாள் கூட்டம் இம்மாதம் 26-ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு ஆட்சியரகத்தில் நடைபெறவுள்ளது.

÷மாவட்ட ஆட்சியர் வெ.பழனிகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இம்மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, மின் வாரியம், பொதுப்பணித் துறை, மீன் வளத்துறை, கால்நடைத்துறை, மண் வளப் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளும் பங்கேற்று விவசாயிகளின் குறைகளை தீர்க்கவுள்ளனர்பங்கேற்று பயன் பெற வேண்டும் என்றார் ஆட்சியர் வெ. பழனிகுமார் .

## கரூர் மாவட்டத்தில் நெல் அறுவடைப் பணிகள் தீவிரம்

First Published : 25 Feb 2010 05:15:07 AM IST

கரூர், பிப். 24: கரூர் மாவட்டத்தில் 8,500 ஹெக்டேரில் நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது.

காவிரி, அமராவதி நதிகள் மூலமாக கரூர் மாவட்டத்தில் சுமார் 14,200 ஹெக்டேரில் சம்பா நெல் செம்டம்பர், அக்டோபர் மாதங்களில் பயிரிடப்பட்டது.

தற்போது, நெல் அறுவடை காலம் தொடங்கியதையடுத்து, கரூர் மாவட்டத்தில் நெல் அறுவடை பணிகள் தீவிரமடைந்து வருகின்றன. இதுகுறித்து கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே. ஜெகதீசன் கூறியது:

கரூர் மாவட்டத்தில், 14,200 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெல் பயிரில் தற்போது சுமார் 8,500 ஹெக்டேரில் அறுவடை செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவை 2, 3 வாரங்களில் அறுவடை செய்யப்படும்.

இதில் 5,200 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி முறை கையாளப்பட்டுள்ளது. இதன் மூலமாக ஒரு ஹெக்டேருக்கு வழக்கமாக கிடைக்கும் மகசூல் அளவான 4,500 கிலோவைவிட, 30 சதம் கூடுதலாக 6,500 கிலோ வரை பெற முடியும்.

கரூர் மாவட்டத்தில் கூலித் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டால், பெரும்பாலான இடங்களில் இயந்திரங்கள் மூலமாகவே நெல் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால், செலவு மிச்சமாவதுடன் பணிகளும் விரைவாக நடைபெறுகிறது.

நெல் அறுவடை முடிந்து தற்போது, குளித்தலை, கிருஷ்ணராயபுரம், தோகைமலை பகுதிகளில் நவரை பருவம் தொடங்கி நாற்று நடும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நவரை பருவத்தில் அனைத்து விவசாயிகளையும் செம்மை நெல் சாகுபடியின் கீழ் கொண்டு வர ஆட்சியர் ஜெ. உமாமகேஸ்வரி கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

செம்மை நெல் சாகுபடி முறையில் விவசாயம் செய்யும் போது நாற்றுகளுக்கிடையே நல்ல காற்றோட்டம் கிடைக்கும். இதன் மூலமாக ஒரு நாற்றில் சுமார் 50 தூர்கள் வரை கிடைப்பதால் நல்ல விளைச்சலை பெற முடியும்.

இதற்காக நாற்று நடும் மார்க்கர் கருவி வேளாண்மைத் துறை மூலமாக இலவசமாக வழங்கப்படுகிறது. அதேபோல, களையெடுப்பதற்கு பயன்படும் கோனாவீடார் கருவியும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்தக் கருவியை நாற்று நட்டதிலிருந்து 3 முறை பயன்படுத்தி களை எடுக்கலாம்.

எனவே, தற்போது நவரை பருவத்தில் நெல் பயிரிடும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

அறுவடை செய்யும் நெல்லை வாங்குவதற்காக 8 இடங்களில் அரசு வாணிபக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் இங்கு நெல்லை கொடுத்து பயன்பெறலாம் என்றார் அவர்.

## 50 விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 25 Feb 2010 01:23:23 AM IST

உளுந்தூர்பேட்டை, பிப். 24: உளுந்தூர்பேட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் விதை கிராமத் திட்டம் கீழ் 50 விவசாயிகளுக்கு பு.கிள்ளனூர் கிராமத்தில் அண்மையில் பயிற்சி கொடுக்கப்பட்டது.

விழாவிற்கு உளுந்தூர்பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் என். கனகசபை தலைமை வகித்து, தரமான விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்வது குறித்து சிறப்புரையாற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் பூ.செல்வநிதி வரவேற்றார்.

விதைச் சான்று அலுவலர் வி.வேலு பங்கேற்று தரமான விதைகளை தேர்வு செய்து எப்பருவத்தில் விதைக்க வேண்டும் என்பது குறித்து விளக்கினார்.

பயிற்சியில் உதவி விதை அலுவலர் ஆ.இளவரசன், விரிவாக்க உதவியாளர் பொன்.சாமிதுரை, உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜி.தியாகராஜன், எம்.அண்ணாதுரை, சி.ராஜக்கண்ணு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல்

First Published : 25 Feb 2010 03:15:32 AM IST



செம்மை நெல் சாகுபடியில் பயிரிடப்பட்ட நெல்வயலில் கோனோவீடர் இயந்திரத்தால் களை எடுக்கும் விவசாயி. இடம்: கார்த்திகேயபுரம்

திருத்தணி, பிப். 24: திருத்தணி வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் கிடைப்பதாக வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருத்தணியில் செம்மை நெல் சாகுபடி செய்ய திருத்தணி வட்டார விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 80 ஏக்கர் இலக்கு அளிக்கப்பட்டு இத்திட்டத்தில் முருகம்பட்டு, தரணிவராகபுரம், சத்திரஞ்ஜெயபுரம், பட்டாபிராமாபுரம், கிருஷ்ணசமுத்திரம், கார்த்திகேயபுரம், வி.கே.என். கண்டிகை ஆகிய கிராமங்களில் உள்ள 80 விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3000 வீதம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. வேளாண்மை துறை மூலம் விதை நெல் 3 கிலோ, நெல் நுண்ணூட்டச் சத்து 5 கிலோ, அசோஸ்பைரில்லம் 10 எண்கள், பாஸ்போபாக்டீரியா 10 எண்கள், கோனோ வீடர் 1 எண், நீலப்பச்சைப்பாசி 4 கிலோ வழங்கப்படுகிறது.

**நாற்றங்கால் தயாரித்தல் :**

1 ஏக்கர் நடவு செய்ய 40.செ.மீ. நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும். பாசன வசதி அருகாமையில் உள்ள இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.  மேட்டுப் பாத்தியில் பிளாஸ்டிக் ஷீட் அல்லது உபயோகப்படுத்திய பாலித்தீன் சாக்குகள் (யூரியா சாக்கு) பரப்பு வேண்டும். விதை நேர்த்தி செய்ய 3 கிலோ விதையை 24 மணி நேரம் ஊறவைத்து, பின் வடிகட்டி 24 மணிநேரம் வைத்திருந்து இரண்டாம் கொம்பின் போது விதைக்க வேண்டும். 1 செ.மீ. பரப்பில் 75 கிராம் விதை அளவு போதுமானது.

முன்கட்டிய விதையை பரவச்செய்து சலித்த மண்ணை 5 மி.மீ. அளவுக்கு மூடவேண்டும். நாற்றங்காலை தென்னை மட்டை(அ) வைக்கோலை கொண்டு மூடி பாதுகாக்க வேண்டும்.

பூவாரிக்கொண்டு ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் தெளிக்க வேண்டும். 14 நாள்கள் தேவையான வளர்ச்சியினை பெற்றவுடன் 22 அல்லது 25 செ.மீ. இடைவெளியில் வரிசை நடவு செய்ய வேண்டும். 10 நாள்கள் இடைவெளியில் மூன்றுமுறை கோனாவீடர் ஓட்டுவதால் காற்றோட்ட வசதியினை மேம்படுத்துவதுடன் களையினை கட்டுப்படுத்துகிறது. புதிய வேர்கள் மூலம் பயிர் அதிக எண்ணிக்கையில் தூர்விட்டு மகசூல் சாதாரணமாக நடவு செய்வதை விட 30-40 சதவீதம் அதிகம் மகசூல் தருகிறது.

**வரவு செலவு :**

தானிய மகசூலில் நடைமுறை சாகுபடியில் ரூ.30315 செலவு செய்யப்படுகிறது. ஆனால் செம்மை நெல் சாகுபடியில் ரூ.40100 வரை லாபம் கிடைக்கிறது என திருத்தணி உதவி வேளாண்மை இயக்குநர் தெரிவிக்கிறார்.

தினமலர்

**விதையில் கவனம்; மகசூல் பாதிக்கும் : சான்றளிப்பு இயக்குனர் எச்சரிக்கை**

கோவை : "இனத்தூய்மை இல்லாத விதைகளால் மகசூல் பாதிக்கும்' என, விதைச்சான்றளிப்புத் துறை எச்சரித்துள்ளது.அதன் இயக்குனர் கார்முகிலன் அறிக்கை: விவசாயத்தின் முக்கிய அம்சமே நல்ல மகசூல் பெறுவது தான். பயன்படுத்தப்படும் இடு பொருட்கள் தரமுள்ளதாக இருக்க வேண்டும். பல்வேறு இடுபொருட்கள் இருந்தாலும், விதை அடிப்படையிலான இடுபொருட்கள் முக்கியம். விதைகளை தேர்வு செய்கையில், சிறிது கவனக்குறைவாக இருந்தாலும், மகசூல் பாதிக்கும். எனவே, நல்ல பாரம்பரியமுள்ள சுத்தமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும். நல்ல விதை என்பது, தேவையான முளைப்புத்திறன்; அளவான ஈரப்பதம்; பாரம்பரிய சுத்தம்; பிற ரக கலப்பு இல்லாமை; பூச்சி நோய்தாக்குதல் இல்லாமை ஆகிய தன்மைகளை கொண்டிருக்க வேண்டும்.

விதையில் பாரம்பரிய சுத்தம் இல்லையென்றால் விளைச்சல் தரமாக இருக்காது. பாரம்பரிய சுத்தம் இல்லாத விதைகளை விதைப்பதால், வயல்களில் பயர் உயரம் மாறுபட்டு இரண்டு அல்லது மூன்று அடுக்குகளில் விளையும்; வெவ்வேறு காலகட்டத்தில் பூக்கும். அதாவது, முதல் அடுக்கில் பயிர் பூக்கும் போது, இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு பயிர்கள் வளர்ச்சி பருவத்தில் இருக்கும். முதல் அடுக்கிலுள்ள பயிர் முதிர்ந்து உதிர்ந்துவிடும். இதனால், முதலில் முற்றிய பயிரை அறுவடை செய்ய இயலாது. ஒரே நேரத்தில் அறுவடை செய்வதும் சிரமம். மிகுந்த சிரமங்களுக்கிடையில் அறுவடை செய்தாலும், விதைகளின் நிறம், தன்மை மாறுபடுவதால், குறைந்த விலைக்கு விற்பனை செய்ய நேரிடும். சில நேரங்களில் மீண்டும் விதைப்புக்கு பயன்படுத்த, விதைகளை எடுத்து வைக்க முடியாது.

சான்று விதை உற்பத்தியில் விதைச்சான்று அலுவலர்களால் விதை வயல்கள் ஆய்வு செய்யப்பட்டு வயல் தரம் பேணப்படுகிறது. இனத்தூய்மை பரிசோதனைக்கு விதை மாதிரி எடுக்கப்பட்டு, இனத்தூய்மை பரிசோதனை பண்ணையில் பயிரிடப்பட்டு, வல்லுநர்களால் நிர்ணயிக்கப்பட்ட குணாதிசயங்கள் மற்றும் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச இனத்தூய்மை சதவீதம் இருந்தால் மட்டுமே, சான்றளிப்புக்கு வரும் குவியலுக்கு சான்றட்டை வழங்கப்படுகிறது.கடைகளில் விற்பனை செய்யப்படும் விதை குவியல்களில் இருந்து இனத்தூய்மை பரிசோதனைக்கு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனை செய்யப்படுகிறது.

மத்திய அரசால், பயிர் ரகங்களுக்கு 98 சதவீதம், காம்போசிட், சிந்தடிக்ஸ் மல்டிலைன்ஸ் மற்றும் வீரிய ரகங்களுக்கு 95 சதவீதம், ஆமணக்கு வீரிய ரகத்துக்கு 85 சதவீதம், வீரிய பருத்தி, மஸ்க்மெலன், வீரிய கத்திரி, வீரிய தக்காளி மற்றும் உருளைக்கிழங்கு விதைகளுக்கு (டி.பி.எஸ்.,) 90 சதவீதம் என இனத்தூய்மைக்கான தரம் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் விதைகளை வாங்கும் போது, சான்றட்டை விபரங்களில் இனத்தூய்மை சதவீதம் குறிக்கப்பட்டுள்ளதா, என சரிபார்த்து வாங்க வேண்டும்.இது குறித்த விவரங்களுக்கு, விதைச்சான்று இயக்குனர், 1424 - ஏ, தடாகம் சாலை, ஜி.சி.டி., போஸ்ட், கோவை, என்ற முகவரியை அணுகலாம் அல்லது 0422- 243 2984, 245 7554 என்ற டெலிபோன் எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, கார்முகிலன் தெரிவித்துள்ளார்.

## நூற்புழுக்களை கட்டுப்படுத்த புதிய வழிமுறைகள் தேவை : வேளாண் பல்கலை துணைவேந்தர் பேச்சு

கோவை : ""நூற்புழுக்கள் பயிர்களின் உள்ளே சென்று தாக்குவதால், பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்துவது சிரமம். இவற்றை கட்டுப்படுத்த புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும்," என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்."நீடித்த வேளாண்மைக்கு நூற்புழுவியல் ஆராய்ச்சியில் புதிய வழிமுறைகள்- சவால்களும் திட்டங்களும்' எனும் மூன்று நாள் தேசிய கருத்தரங்கம், கோவை வேளாண் பல்கலையில் நேற்று துவங்கியது.

பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி துவக்கி வைத்தார். பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 150 நூற்புழு விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.துவக்க நிகழ்ச்சியில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: கோவை வேளாண் பல்கலையில் 1961ல் நூற்புழு ஆய்வுக் கூடம் துவங்கப்பட்டது. இதில் 23 நூற்புழு விஞ்ஞானிகள் பணியாற்றுகின்றனர்.நூற்புழுக்கள் பயிர்களை அழித்து அதிக மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. இந்த நூற்புழுக்கள் தானியங்கள், பயறு வகை, எண்ணெய் வித்து, கரும்பு, காய்கறி, பழங்கள், மலர்கள் மற்றும் வாசனை திரவிய பயிர்களில் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன.நூற்புழுக்கள் பயிர்களின் திசுக்களை சாப்பிட்டு கடும் பாதிப்பை ஏற்படுத்துவதால், பயிர்கள் நலிவடைந்து, பாக்டீரியா மற்றும் பூசணத் தாக்குதல்களுக்கு ஆளாகின்றன.

இவை பயிர் நோய்களையும் பரப்புகின்றன. பயிர்களின் உள்ளே சென்று தாக்குவதால், பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தி கட்டுப்படுத்துவது சிரமம்.திறன் வாய்ந்த பல பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பதால், அவை தடை செய்யப்பட்டுள்ளன. நூற்புழுக்களை கட்டுப்படுத்த புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும். நூற்புழுக்களின் வாழ்க்கை மற்றும் இயல்பு முறைகளை பற்றிய விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். மண்ணின் வெப்பத்தை அதிகரித்தல், பயிர் சுழற்சி மேற்கொள்ளுதல், வயலில் அதிக நீரை தேக்குதல் போன்ற உழவியல் முறைகளில் நூற்புழுக்களை அழிக்கலாம்.

இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி கூறினார்.இந்திய நூற்புழுவியல் சங்க பொதுச் செயலாளர் சுதர்சன் கங்குலி பேசுகையில், ""நன்மை செய்யும் நூற்புழுக்களும் மண்ணில் அதிக எண்ணிக்கையில் உள்ளன. மண்ணின் நலனை பாதுகாத்து, பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் எளிதில் கிடைக்க அவை உதவுகின்றன.

பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளையும் சில நூற்புழுக்கள் தாக்கி அழிக்கின்றன. சில நன்மை செய்யும் நூற்புழுக்கள் வெளியிடும் சில நச்சுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் தயாரிக்க உதவுகின்றன. நூற்புழுவியல் ஆராய்ச்சியை தேசிய அளவில் மேம்படுத்துவது முக்கியம்," என்றார்."நூற்புழுவியல் அடிப்படை மற்றும் செயல்பாடு', தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நூற்புழுவியல் தொடக்கம் மற்றும் வளர்ச்சி' ஆகிய இரு நூல்களை துணைவேந்தர் வெளியிட்டார். விழாவில், பல்கலையின் பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஜோனாத்தன், துறைத் தலைவர் சிவக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விளைநிலங்களில் நேரிடையாக நெல் கொள்முதல் : விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தல்

பொள்ளாச்சி : அரசு சார்பில் விளைநிலங்களுக்கு நேரிடையாக சென்று நெல் கொள்முதல் செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டது.ஆனைமலையில் விவசாயிகள் நலச்சங்கம் கூட்டம் நடந்தது. சங்க செயலாளர் அசோக் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். சங்க நிர்வாகி ஜாபர் அலி வரவேற்றார். நுகர்வோர் வாணிப கழக முதுநிலை

மண்டல மேலாளர் வேங்கடப்பிரியா முன்னிலை வகித்தார்."ஆனைமலை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி நடக்கிறது. நெல்லை விற்பனை செய்யும் போது ஆதரவு விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.அரசு சார்பில் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசின் ஊக்கத்தொகையுடன் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதில், அரசு நுகர்வோர் வாணிப கழகத்தினர் விவசாயிகளின் விளைநிலங்களுக்கு நேரடியாக சென்று நெல் கொள்முதல் செய்வர். அப்போது, சாக்கு, எடைக்கூலி மற்றும் போக்குவரத்து செலவும் அரசே கவனித்துக்கொள்ளும். எனவே, பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளும் நேரடி நெல் கொள்முதல் திட்டத்தை பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என்றார்.கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து விவசாயிகளும் விளைநிலத்திற்கே வந்து நெல்லை அரசு கொள்முதல் செய்து கொள்ள சம்மதம் தெரிவித்தனர்.

### வேளாண் திட்ட பணிகள் ஆய்வு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நடந்து வரும் வேளாண் திட்ட பணிகள் குறித்து, வேளாண் கூடுதல் இயக்குனர் (பணி மேலாண்மை) மதுமதி ஆய்வு செய்தார். மொரப்பூர் வட்டாரத்தில் மொரப்பூர், வெள்ளோலை, பாலக்கோடு வட்டாரத்தில், சோமனஹள்ளி ஆகிய கிராமங்களில் விவசாய நிலங்களில் வேளாண் கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு செய்தார்.

மொரப்பூரில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பண்ணை மகளிர் குழுவுக்கு ஐந்து கோனோ களைக்கருவிகள் மற்றும் ஒரு மார்க்கர் கருவியை முழு மானியத்தில் வழங்கினார்.

வெள்ளோலை கிராமத்தில் கோதுமை செயல் விளக்க திடல், பாலக்கோடு வட்டாரத்தில் சோமனஅள்ளியில் சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி செய்யப்பட்ட கத்தரி வயல் ஆகியவற்றையும் ஆய்வு செய்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் முகமது அலி, வேளாண் துணை இயக்குனர் மனோகரன், ராமகிருஷ்ணன், நேர்முக உதவியாளர் (வேளாண்) பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஆரஞ்சு விவசாயிகள் கவனத்திற்கு

தாண்டிக்குடி : கீழ்பழநி மலைப்பகுதியில் ஆரஞ்சில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது.நோய் தாக்கிய பகுதிகளில் வெண்மை அல்லது சாம்பல் நிறத்தில் பொடி தூவியதை போன்ற பூஞ் சாண வளர்ச்சி காணப்படும். தளிர் இலை, பிஞ்சு, கிளைகளில் வேகமாக பரவி காய்ந்து வருவாய் இழப்பை ஏற்படுத்தும்.  இதை கட்டுப் படுத்த கருகல் ஏற்பட்டுள்ள கிளைகளை வெட்டியும், நிலத்தில் கிடக்கும் நோய் தாக்கிய இலை, கிளை எடுத்து எரித்து விட வேண் டும். கந்தகத்தூள் பத்து கிலோ, ஒரு ஏக்கர் அல்லது நனையும் கந்தகம் லிட்டருக்கு 2 கிராம் தண்ணீரில் கலந்து இளம் தளிர் இலைகள் மற்றும் கிளைகளின் மேல் நன்கு படும்படி தெளிக்க வேண்டும் என விவசாயிகளுக்கு ஆலோ சனை தெரிவிக்கப்பட்டுள் ளது.

### விவசாயிகள் சங்க ஒன்றிய குழு கூட்டம்

கிருஷ்ணகிரி: தமிழ்நாடு விவசாயிகள் சங்க வேப்பனப்பள்ளி ஒன்றிய குழு கூட்டம் விருப்பசந்திரம் கிராமத்தில் நடந்தது. ஒன்றிய தலைவர் மாரப்பன் தலைமை வகித்தார். செயலாளர் பாலாஜி, பொருளாளர் சின்னராஜி ஆகியோர் முன்னிலை

வகித்தனர். ரவி வரவேற்றார். கூட்டத்தில், மாநில தலைவர் லகுமையா, மாநில நிர்வாக குழு உறுப்பினர் மாசிலாமணி ஆகியோர் கோரிக்கைகள் குறித்து பேசினர்.

"தீர்த்தம் முதல் என்னேகொல் புதூர் வரை மார்க்கண்டேய நதியில் தடுப்பணை கட்டி தண்ணீரை சேமிக்க வேண்டும். காட்டுப்பன்றிகளால் நாசமாகும் விவசாய பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். 60 வயதை கடந்த விவசாயிகளுக்கு நிபந்தனை இன்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

மாவட்ட செயலாளர் கண்ணு, தலைவர் சீனிவாசன், மாதர் சங்க தலைவி தேவிகா, பஞ்சாயத்து தலைவர் சோமாஜிராவ், ஒன்றிய துணை தலைவர் நாகராஜன், துணை செயலாளர் அஜிஸ்பாட்ஷா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் நடராஜ், எல்லப்பன், வரதராஜீ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகள் சங்க மாநாடு நாளை துவக்கம்

ஓட்டப்பிடாரம்,: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு ஓட்டப்பிடாரத்தில் நாளை துவங்குகிறது. இரண்டு நாள் நடக்கும் மாநாட்டில் நல்லக்கண்ணு கலந்துகொள்கிறார்.ஓட்டப்பிடாரத்தில் நாளை மற்றும் 27ம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு நடக்கிறது. இதில் தேசிய கட்டுப்பாட்டு குழுத்தலைர் நல்லக்கண்ணு, விவசாயிகள் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் துரைமாணிக்கம், சிபிஐ., மாவட்ட பொதுச்செயலாளர் மோகன்ராஜ் உட்பட பலர் கலந்துகொள்கின்றனர். 2 நாட்கள் நடைபெறும் மாநாட்டில் விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றும் பேரணி நடக்கிறது. இதில் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொள்ளவேண்டும் என்றும் மாவட்ட தலைவர் ராஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இலை வெட்டும் புழுக்களை அழிக்க யோசனை

திருச்செந்தூர் : இலை வெட்டும் புழுக்களை அழிக்க குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் தெளிக்குமாறு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.தென்திருப்பேரை வட்டாரம் அங்கமங்கலம், புறையூர் பகுதிகளில் பிசான சாகுபடி செய்யும் நெல்பயிர்களில் இலையை வெட்டி சேதப்படுத்தும் பச்சை மற்றும் பழுப்பு நிற இலை வெட்டும் புழுக்கள் காணப்படுகின்றது. இந்தப் புழுக்கள் பயிரினை வெட்டி சேதப்படுத்தும். இந்த புழுக்களை கட்டுப்படுத்திட மாலை நேரங்களில் ஒரு ஏக்கருக்கு 500 மிலி., குளேரொபைரியாஸ் அல்லது 400 மிலி., எண்டோசல்பான் மருந்தினை பயிரின் மேற்பரப்பில் தெளிக்க வேண்டும் என மேற்படி தகவலை தென்திருப்பேரை வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் பாரதி தெரிவித்துள்ளார்.

### 'வேளாண் கூட்டுறவு வங்கிகளில் தரமான விதைகளையும் பெறலாம்'

திருச்சி: தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் சான்றளிக்கப்பட்ட விதைகளையும் விவசாயிகள் பெறலாம் என்று வையம்பட்டி ஒன்றியத்தில் நடந்த உறுப்பினர் கல்வித்திட்டக் கூட்டத்தில் கள அலுவலர் ரேணுகாதேவி கூறினார்.

திருச்சி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், வையம்பட்டி ஒன்றியத்தைச்சேர்ந்த புறத்தாக்குடி, அமயபுரம், குளத்தூரான்பட்டி, என்.கவுண்டம்பட்டி மற்றும் வையம்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சார்பில் உறுப்பினர் கல்வித் திட்டக் கூட்டம் அந்தந்த கடன் சங்கங்களில் நடந்தது. கூட்டத்தில் வையம்பட்டி கள அலுவலர் ரேணுகாதேவி

பேசுகையில், ""விவசாயிகளுக்கு பயிர்கடன்களையும், உரங்களையும் வழங்கி வரும் நிலையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், சான்றளிக்கப்பட்ட விதைகளையும் தற்போது வழங்கி வருகின்றன.விவசாயிகள் தங்களுக்குத் தேவையான ரகங்களையும், தேவைப்படும் அளவையும் முன்கூட்டியே தெரிவித்தால் தரமான, சான்றளிக்கப்பட்ட விதைகளை நியாயமான விலையில் கூட்டுறவு கடன் சங்கங்கள் பெற்றுத்தரும்.

மருங்காபுரி ஒன்றியம் வளநாட்டிலுள்ள விவசாய மருந்தகத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு வழங்கப்பட்ட பயிர்க்கடன்களை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டி அறவே இல்லை என்ற சலுகையை அரசு அறிவித்துள்ளது", என்றார். திருச்சி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் மதிவாணன், மகளிர் சுய உதவிக்குழுவினருக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஜனஸ்ரீ பீம யோஜனா என்ற புதிய காப்பீட்டு திட்டம் குறித்து விளக்கமளித்தார். கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை புறத்தாக்குடி சங்க தனி அலுவலர் ராஜேந்திரன், செயலாளர் துரைசாமி, சமயபுரம் குளத்தூரான்பட்டி முருகேசன், என்.கவுண்டம்பட்டி ராஜு, வையம்பட்டி வேலப்பன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

### செம்மை நெல் அறுவடை திருவிழா

மணப்பாறை: மணப்பாறை வட்டார வேளாண் துறை சார்பில் செம்மை நெல் சாகுபடி அறுவடை திருவிழா நடந்தது. பண்ணாங்கொம்பு, பொய்கைப்பட்டி கிராமங்களில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 560 ஹெக்டேரில் செம்மைநெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை நடந்தது. பன்னாங்கொம்பு அர்சுனன் என்பவரது வயலில் அம்பை 19 ரக நெற்பயிர் அறுவடை திருவிழாவிற்கு வேளாண் உதவி இயக்குனர் கோமதி தங்கம் தலைமை தாங்கினார். இதில் ஏக்கருக்கு 4 ஆயிரத்து 320 கிலோ (ஹெக்டேருக்கு 10 ஆயிரத்து 800 கிலோ) மகசூல் பெறப்பட்டது. அறுவடை திருவிழாவில் வேளாண் அலுவலர் வேல்முருகன், துணை அலுவலர் தங்கராஜ் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர்திருவாரூரில் இன்று (25ம் தேதி) விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடக்கிறது.திருவாரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் சந்திரசேகரன் தலைமையில் நடக்கிறது. இதில் விவசாய சங்க பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.

### விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்

திருவெண்ணெய் நல்லூர் : விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் கலந்தாய்வு கூட் டம் அரசூரில் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் கண்ணன் தலைமை தாங்கினார். நபார்டு உதவி பொது மேலாளர் உமாமகேஸ் வரராவ், கணேசன், ரங்கதாஸ் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குனர் தேவநாதன் வரவேற் றார். உழவர் பயிற்சி நிலைய ஒருங்கிணைப்பாளர் ராமமூர்த்தி, உதவி இயக்குனர் இளவரசன்,பேராசியர் மணிவண்ணன், உதவி பேராசிரியர் அன்புமணி, கங்காகவுரி, சரசுவதி ஆகியோர் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடம் விளக்கினர். இதில் 113 பேருக்கு விவசாய இடு பொருட்கள் வழங் கப்பட்டன. வேளாண் அலுவலர் எழில்ராஜா நன்றி கூறினார்.

## பூ, பழ செடிகள் விற்பனை ஜோர்

கள்ளக்குறிச்சி : ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்பட்ட உயர் ரக பூ செடிகள் மற்றும் பழ மர கன்றுகள் விற்பனை கள்ளக்குறிச்சியில் ஜோராக நடந்தது.கள்ளக்குறிச்சி-சேலம் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் ஏராளமான பூச் செடிகள், பழ மரக் கன்றுகள் விற்பனையில் சிலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களிடம் கேட்டபோது கூறியதாவது: ஆந்திரா மாநிலம் ராஜமுந்திரியில் உள்ள அரசு மற் றும் தனியார் பண் ணையிலிருந்து மொத்தமாக செடிகளை வாங்கி வருகிறோம்.

அங்கிருந்து கள்ளக்குறிச்சி நகர பகுதியின் சாலை ஓரத் தில் கொண்டு வந்து வைத்து பூச் செடிகளை விற் பனை செய்து வருகிறாம்.அதன்படி  பூ செடிகள், பலா, தென்னை, மாங்கன் றுகள் உட்பட 200க்கும் மேற்பட்ட உயர் ரக கன்றுகள் விற்பனை செய்கிறோம். செடிகள் 30 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இவை அனைத்தும் மற்ற பழ மரங்களை போல நீண்ட நாள் கழித்து அறுவடைக்கு காத்திருக்காமல், ஒரு ஆண்டிற்குள் அறுவடைக்கு தயாராகிறது. இதனால் குறைந்த நாளில் அதிக லாபம் கிடைக்கும் என தெரிவித்தனர். நேற்று காலை முதல் பெண்கள் உள்ளிட்ட பலரும் பூ செடிகள், பழ மரகன்றுகளை வாங்கி சென்றனர்.

## கால்நடை கிளை தரம் உயர்வு

உடுமலை : கால்நடை துறை உடுமலை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள கிளை நிலையங்களில் பல ஆண்டுகளாக பணியிடங்கள் காலியாகவும், மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படாமலும் உள்ளது. கால்நடைகள் வளர்ப்பு அதிகமுள்ள பகுதிகளில் செயல்படும் மூன்று கால்நடை கிளை நிலையங்களை மேம்படுத்த பல ஆண்டுகளுக்கு பிறகு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. குடிமங்கலம், செல்லப்பம்பாளையம், பூலாங்கிணறு கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்ட மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பணியாற்ற தலா ஒரு இளநிலை கால்நடை உதவி டாக்டர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மல்பெரி பயிர்களுக்கு இயற்கை மற்றும் உயிர் உரம் : விவசாயிகளிடம் வலியுறுத்தல்

உடுமலை : ""பட்டுக்கூடு வளர்ப்பிற்கான மல்பெரி பயிர்களுக்கு  ரசாயன உரங்களை குறைத்து இயற்கை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்," என கோவை வேளாண் பல்கலை., உதவி பேராசிரியர் முருகேஷ் அறிவுறுத்தினார். உடுமலை பட்டு வளர்ச்சித்துறை சார்பில், தொகுப்பு வளர்ச்சி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் "வெண்பட்டு விவசாயிகள் விழிப்புணர்வு' கூட்டம் நடந்தது.

"முதிர்புழு வளர்ப்பில் புதிய தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை உதவி பேராசிரியர் முருகேஷ் பேசியதாவது: தரமான பட்டுக்கூடு உற்பத்திக்கு சுற்றுச்சூழல், நல்ல மருந்து அவசியமானது. உடுமலையில், சுற்றுச்சூழல் நன்றாக இருப்பதுடன்  மேலும், தரமான பட்டுக்கூடு உற்பத்தி மேற்கொள்ள மல்பெரி இலைகள் தரமானதாக வேண்டும்.

இதற்கு ரசாயன உர அளவை குறைத்து  இயற்கை உரம், உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்.மண்புழு உரத்தை தொடர்ந்து பயன்படுத்தினால் சாறு உறிஞ்சும் புழுக்களை கட்டுப்படுத்தலாம். பண்ணை கழிவுகளை வீணாக்காமல், "கம்போஸ்' செய்து பூஞ்சானமாக மாற்றி மக்க வைக்க வேண்டும். இதன் மூலம் தரமான மல்பெரி இலைகள் பெறலாம். நல்ல புழு வளர்ப்பிற்கு தட்ப வெப்ப நிலை, காற்றோட்ட வசதி என்பது அவசியமானதாகும். வேளாண்மை

பல்கலைக்கழகம் மூலம் "இளமதி' என்ற மருந்து வழங்கப்படுகிறது. இதனை பயன்படுத்தினால் 6 முதல் 7 கிலோ வரை பட்டுக்கூடு கூடுதலாக கிடைக்கும்.அறுவடை ஐந்து நாட்களுக்கு பின் மேற்கொள்ள வேண்டும். அறுவடை செய்த பின்பு கூடுகளை காற்றோட்ட பகுதியில் வைக்க வேண்டும்.

கூடு கட்டிய பின்பு முறையாக தட்ப வெப்ப நிலை பராமரிக்க வேண்டும். கூடுகளை பட்டுக்கூடு அங்காடிக்கு விற்பனைக்கு எடுத்து செல்லும் போது நல்ல குளிர்ந்த நேரத்தில் பாதுகாப்பாக எடுத்து செல்ல வேண்டும். இது போன்ற வழிமுறைகளை பின்பற்றி நல்ல தரமான பட்டுக்கூடுகளை அதிகளவு உற்பத்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.தரமான பட்டுக்கூடுஉற்பத்தி மேலாண்மை குறித்து உடுமலை மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் பேசினார். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து உடுமலை பகுதி பட்டுவளர்ப்பு குறித்து பார்வையிட வந்த 15 விவசாயிகள் மற்றும் உடுமலை பகுதி பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.